**Deposition of witness**
**(Chapter XXIII code of Criminal Procedure)**
**In the court of Judicial Magistrate No.I, Tindivanam.**

**CASE NO. CC. 742/2025 PW- 4**

Name : மணிகண்டன்
Father / Husband name : தனுசு
Village : அகூர்
Age : 46
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 25.03.2026.

A1 to A3 present. APP present. Defence Counsel present. Witness Identified by HC1967 - V. Selvam.

**முதல் விசாரணை** :

நான் விவசாய வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி அய்யப்பனை எனக்கு தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். முதல் கையொப்பம் யாருடையது என்று எனக்கு தெரியாது. சுமார் 2 வருடத்திற்கு முன்பு பகல் நேரத்தில் அகூர், குள்ளத்தங்கரை தெருவில் நான் இருந்த போது வெள்ளிமேடுபேட்டை போலிசார் வந்து சண்டை வழக்கு சம்மந்தமாக விசாரித்து எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். ( **பார்வை மகஜரில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா. ஆ. 2 ஆக குறியிடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது)**

ஆஜர் எதிரிகளை தெரியுமா என்றால் தெரியும், எனது உறவினர்கள் அல்ல. போலிசார் உங்களை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது 25.10.2024 அன்று நானும், தனுசும் எங்கள் தெருவில் உள்ள பிரசாத் என்பவரின் வீட்டின் அருகே இருந்த போது வெள்ளிமேடுபேட்டை காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்

அங்கு வந்து இந்த வழக்கில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும் சொல்லியுள்ளேன், அந்த பார்வை மகஜரில் நானும் அய்யப்பனும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும் போலிசார் விசாரணையின் சொன்னேனா என்றால் சொன்னேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

இந்த சம்பவம் எப்போது, எதற்காக நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். யார் யாருக்கு நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். காவல் அதிகாரி கொடுத்த பேப்பரில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அதில் என்ன எழுதியுள்ளது என்று நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

**Deposition of witness**
**(Chapter XXIII code of Criminal Procedure)**
**In the court of Judicial Magistrate No.I, Tindivanam.**

**CASE NO. CC. 742/2025 PW- 5**

Name : Elumalai
Father / Husband name : Shanmugam
Village : Agoor
Age : 51
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 25.03.2026.

A1 to A3 present. APP present. Defence Counsel present. Witness Identified by HC1967 - V. Selvam.

**முதல் விசாரணை** :

நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா. 1 சரவணன், அ.சா. 3 பிரசாத் ஆகியோர்களை எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. எங்களது ஊரில் சண்டை நடந்ததாக கேள்விப்பட்டேன். யார் யாருக்கு சண்டை என தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது)**

ஆஜர் எதிரி எனது உறவினர்களா என்றால் இல்லை, ஊர்காரர்கள் பழக்கமானவர்கள். போலிசார் உங்களை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரித்த போது 24.10.2024 அன்று இரவு 07.30 மணியளவில் எனது மகன் தமிழ்செல்வனிடம் விஷால் அசிங்கமாக திட்டிக்கொண்டு இருந்தார் என்றும், இதை கேட்ட சரவணனை விஷால் உடன் இருந்த ரஞ்ஜித்குமார் சரவணனை அசிங்கமாக திட்டி, அங்கிருந்து சென்றுவிட்டார்கள் என்றும், பிறகு பிரசாந்த் வீட்டின் எதிரே சரவணனும், பிரசாந்தும் பேசிக்கொண்டு இருந்த போது அங்கு வந்த விஷால் , ரஞ்ஜித் இருவரும் சரவணனை

பார்த்து நாங்கள் தமிழ்செல்வனை திட்டினால் உனக்கு என்ன என்று அசிங்கமாக திட்டி ரஞ்ஜித் தன் கையில் வைத்திருந்த சிறிய கத்தியால் சரவணனின் இடதுபக்க கண் அருகில் குத்தினார் என்றும், தடுக்க வந்த சரவணனின் இருகைகளையும் விக்னேஷ், விஷாலும் பிடித்துக்கொண்டார்கள் என்றும், ரஞ்ஜித் சரவணனை தாக்கி கையில் வைத்திருந்த கத்தியை காண்பித்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் போலிசார் விசாரணையின் சொன்னேனா என்றால் இல்லை. மேற்படி விவரங்களை போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு எதிரிகளை காப்பற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** : இல்லை

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.